Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 91 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 01.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# காரைக்குடியில் ரூ. 100 கோடியில் அரசு சட்டக் கல்லூரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



சிவகங்கை: 2026 சட்டமன்ற தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் பரபரப்பாக இயங்கி வருகிறார்கள். ஆட்சியை தக்க வைப்பதற்காக திமுக ஆட்சியிலும், கட்சியிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரண்டு நாட்கள் அரசு முறை பயணமாக நேற்று மாலை சிவகங்கை மாவட்டத்திற்கு வந்துள்ளார். காரைக்குடியில் புதிதாக கட்டப்பட்ட சட்டக்கல்லூரி மற்றும் வேளாண் கல்லூரியை திறந்து வைத்தார்.

சட்டமன்ற தேர்தல் அறிவிப்பிற்கு குறுகிய காலமே உள்ளது. ஆட்சியை தக்க வைப்பதற்கு திமுக பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறது. கட்சி ரீதியாகவும், ஆட்சி ரீதியாகவும் பல்வேறு நடவடிக்கைகளுடன் களத்தில் வேகம் காட்டி வருகிறார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் தொடங்கி பூத் வாரியாக பணிகளைதுரிதப்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம் சென்றுள்ளார். நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றஅவர், இன்றும் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளார். திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் மகாத்மாகாந்தி, கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர் ப. ஜீவா சந்தித்து பேசியதன் நினைவாக, அந்த இடத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ரூ.3.27 கோடி மதிப்பில் மணி மண்டபம் கட்டப்பட்டது. அதை ஸ்டாலின் நேற்று திறந்து வைக்கிறார். இந்த நிகழ்வில் சிபிஐ மற்றும் சிபிஎம்கட்சி நிர்வாகிகளும் பங்கேற்றனர். அப்போது சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம் சென்னையில் மார்க்ஸ் சிலை திறக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். அதற்குஸ்டாலின், சென்னையில் வருகிறபிப்ரவரி 6 ஆம் தேதி மார்க்ஸ் சிலை திறக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அதன்பிறகுகுன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் பங்கேற்றார். அப்போது அவரின் உருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்திய அவர், நூற்றாண்டு விழாமலரை வெளியிட்டார். இறுதியாக நேற்று காரைக்குடி கழனிவாசல் பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீறுகவியரசர் முடியரசனாரின் திருஉருவச் சிலையை திறந்து வைத்தார்.

அரசு விருந்தினர் மாளிகையில் தங்கினார். இன்று சனிக்கிழமை காலை காரைக்குடி அருகே கானாடுகாத்தான் பேரூராட்சியில் சுமார் ரூ.67 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள செட்டிநாடு வேளாண்மைக் கல்லூரி கட்டிடத்தைதிறந்து வைத்தார்.

அதேபோல கழனிவாசல் பகுதியில் சுமார் ரூ. 100 கோடியில் கட்டப்பட்டுள்ள சட்டக்கல்லூரி கட்டிடத்தையும் முதலமைச்சர் திறந்துவைத்தார். இதையடுத்து ரூ. 13.36 கோடி மதிப்பில் 28 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ. 2,559.50 கோடி மதிப்பில் 49 நிறைவடைந்த திட்டப்பணிகளையும் முதலமைச்சர் திறந்துவைத்தார். அந்த அரசு விழாவில் 15,453 பயனாளிகளுக்கு ரூ. 205.06 கோடியிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இறுதியாக கழனிவாசல் பகுதியில் ரூ. 32 கோடியில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

# மகாராஷ்டிர துணை முதல்வராக மறைந்த அஜித் பவாரின் மனைவி சுனேத்ரா பவார் பதவியேற்றார்



ராஜ்யசபா எம்.பி.யும், மறைந்த அஜித் பவாரின் மனைவியுமான சுனேத்ரா பவார், என்சிபி சட்டப்பேரவை கட்சித் தலைவராக இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் மகாராஷ்டிராவின் துணை முதல்வராகப் பதவியேற்றார். இதையடுத்து, மகாராஷ்டிராவின் முதல் பெண் துணை முதல்வர் என்ற சிறப்பை அவர் பெற்றார்.

விமான விபத்தில் அஜித் பவார் உயிரிழந்ததை அடுத்து, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, இன்று மதியம் நடந்த கூட்டத்தில், சட்டப்பேரவை கட்சித் தலைவராக சுனேத்ரா பவார் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். என்சிபி கட்சியின் செயல் தலைவர் பிரபுல் படேல் மற்றும் மாநிலத் தலைவர் சுனில் தட்கரே உள்ளிட்ட என்சிபி தலைவர்கள், மும்பையில் உள்ள விதான் பவனில் கூடி, சுனேத்ரா பவாரின் பெயரை முன்மொழிந்தனர்.

சுனேத்ரா பவார் என்சிபி சட்டப்பேரவைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, என்சிபி தலைவர்கள் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸை சந்தித்து அதற்கான கடிதத்தை வழங்கியது.

இதனைத் தொடர்ந்து, லோக் பவனில் சிறிய அளவில் நடந்த பதவியேற்பு விழாவில் சுனேத்ரா பவார் துணை முதல்வராக பதவியேற்றார். சுனேத்ரா பவாருக்கு மகாராஷ்டிர ஆளுநர் ஆச்சார்யா தேவவிரத் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே மற்று அமைச்சர்கள் கலந்துகொண்டனர். ராஜ்ய சபா உறுப்பினரான 62 வயதான சுனேத்ரா பவார், மகாராஷ்டிர சட்டப்பேரவையின் இரு அவைகளிலும் உறுப்பினராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, மகாராஷ்டிர துணை முதல்வராக இருந்த அஜித் பவார் கடந்த 28-ம் தேதி விமான விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, மகாராஷ்டிர அரசியலில் திடீரென ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை தொடர்ந்து, துணைமுதல்வர் பதவிக்கான முன்மொழிவை அவரது மனைவி சுனேத்ராபவார் ஏற்றுக்கொண்டார்.

பிப்ரவரி 7-ம் தேதி புனே ஜில்லா பரிஷத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், கட்சியின் செல்வாக்கை உயர்த்தும் நோக்கில் என்சிபி-யின் மூத்த தலைவர்கள் சுனேத்ரா பவாரின் பெயரை இந்தப் பதவிக்கு பரிந்துரைத்தனர். பவார் குடும்பத்தினரிடையே விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்ட பின்னரே, இந்த முடிவை அவர் ஏற்றுக்கொண்டதாக தெரிகிறது. பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச்சில் நடக்க உள்ளதால், நிதித் துறையை தற்காலிகமாக முதல்வர் பட்னாவிஸ் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். பின்னர் அது தேசியவாத காங்கிரஸிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

# தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் அதிகமான குற்றசம்பவங்கள் நடக்கின்றன எடப்பாடி பழனிசாமி கண்டனம்



முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் தமிழகம் தலைகுனிந்து நிற்பதாக அதிமுகபொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், உலக சரித்திரத்தில் ஹிட்லர், முசோலினி, நீரோ போன்ற கொடுங்கோல் மன்னர்களைப் பற்றி மக்கள் கேள்விப்பட்டிருப்பார்கள்; சரித்திரப் புத்தகங்களில் படித்திருப்பார்கள்.

ஆனால், இந்த சர்வாதிகாரிகளின் மொத்த உருவமாக, தமிழகத்தின் முதலமைச்சர் ஸ்டாலினை தமிழக மக்கள் பார்க்கிறார்கள்.

நடு இரவில் ஒரு பெண் தனியாக, பாதுகாப்பாக நடந்து செல்கிறாரோ அன்றுதான் உண்மையான சுதந்திரம் பெற்ற நாள் என்று மகாத்மா காந்தி கூறினார். ஆனால், கடந்த 56 மாத தி.மு.க. ஆட்சியில் காவல் துறையை தனது ஏவல் துறையாக, முதலமைச்சர் ஸ்டாலின் மாற்றி வைத்துள்ளதால் சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. 6 வயது சிறுமி முதல் மூதாட்டிகள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. போதை ஆசாமிகள் எந்த நேரம் இவர்களை சீரழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்று தெரியவில்லை. இந்நிலையில், தீய சக்தி தி.மு.க-வின் ஆட்சி முடிவுக்கு வரும் நிலையில், ₹ரோம் நகரம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போல் மகளிர் மாநாடு நடத்துகிறார். 56 மாதங்களாக நிர்வாகத்திறனற்ற ஆட்சி செய்து, இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாக தமிழ் நாட்டை மாற்றிவிட்டு, நிதியே இல்லாமல் மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு, கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். சென்னை தரமணியில் வெளி மாநில இளம்பெண், போதை ஆசாமிகளால் சீரழித்து கொல்லப்பட்டுள்ளார். கண்முன்னே மனைவி பலாத்காரம் செய்யப்படுவதை தடுத்த கணவனும்; இந்த கொடுஞ்செயலைப் பார்த்து அழுத இரண்டு வயது குழந்தையும் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார்கள். சென்னையில் உள்ள நந்தனம் அரசு கலைக் கல்லூரி கேன்டீனில் பணியாற்றும் அரியலூரைச் சேர்ந்த பெண், திமுக பிரமுகரால் சீரழிக்க ப்பட்டுள்ளதோடு; அவரது நண்பர்களுக்கும் விருந்தாக்கப்பட்டு ள்ள கொடுமை அரங்கேறியுள்ளது. கொடுஞ்செயலில் ஈடுபடுபவர்களுக்கு போலீசை கண்டு பயமில்லாத நிலை இருப்பதற்கு ஆட்சியாளர்களின் செயல்பாடுகளே காரணம்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ. 7,600 குறைவு; வெள்ளி கிலோ ரூ. 55,000 குறைவு



சென்னையில் தங்கத்தின் விலை சவரனுக்கு (சனிக்கிழமை) ஒரேநாளில் ரூ.7,600 குறைந்துள்ளது. தங்கத்தின் விலை இதுவரை இல்லாத அளவுக்கு வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த ஜன. 29 அன்று அதிகபட்சமாக ஒரே நாளில் சவரனுக்கு ரூ. 9,520 உயர்ந்தது.

இதையடுத்து நேற்று (ஜன. 30) காலையில் சவரனுக்கு ரூ. 4,800, மாலையில் ரூ. 2,800 குறைந்து மொத்தமாக ரூ.7,600 குறைந்தது. தொடர்ந்து இன்றும் சனிக்கிழமை) தங்கம் விலை சவரனுக்கு ரூ. 7,600 குறைந்துள்ளது. அதன்படி இன்று ஒரு சவரன் ரூ. 1,19,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிராம் தங்கம் ரூ. 950 குறைந்து ரூ. 14,900-க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் குறைவு!

வெள்ளி விலை இன்று கிராமுக்கு ரூ. 55 குறைந்து ரூ. 350-க்கும் ஒரு கிலோ ரூ. 55,000 குறைந்து ரூ. 3,50,000 -க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகே சிறாவயல் திடலில் மகாத்மாகாந்தி, தோழர் ஜீவா திருஉருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் திறப்பு

## முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்



1927-இல் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த மகாத்மா காந்தியடிகள், சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகே சிறாவயலில் தோழர் ஜீவா நடத்தி வந்த ஆசிரமத்திற்கு நேரில் சென்று சந்தித்தார். அதன் நினைவாக சிறாவயல் மஞ்சுவிரட்டு திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ரூ 3.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உத்தமர் காந்தியடிகள் - தோழர் ஜீவா திருவுருவ சிலைகளுடன் கூடிய அரங்கத்தை தமிழக முதல்வர் முக. ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்பு அவர்களது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியவர், அமைச்சர்கள் சாமிநாதன், பெரியகருப்பன், மெய்யநாதன், தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர் உள்ளிட்ட அமைச்சர்கள் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, மாவட்ட ஆட்சியர் பொற்கொடி உள்ளிட்டோருடன் இணைந்து திருவுருவ சிலை அருகே நின்றுபுகைப்படம்எடுத்துக் கொண்டார். அதன் பின்பு மணிமண்டபம் முன்பு கூடிய மக்கள் மத்தியில் பேசுகையில், காந்தி ஜீவா சந்திப்பு வரலாற்று சிறப்புமிக்கது. தற்போது அதை நினைவுச்சின்னமாக ஆக்கியுள்ளோம் என்றார். பின்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலசெயலாளர்சண்முகம், சென்னையில் கார்ல் மார்க்ஸ் திருவுருவச்சிலைதிறந்து வைக்க வேண்டுகோள் விடுத்தார். வருகின்ற பிப்ரவரிமாதம்6ம்சென்னையில் கார்ல் மார்க்சின் திருவருட்சிலை திறக்கப்படும் என்றவர், நூலகத்தை அதிகமாக பயன்படுத்தியவர் கார்ல் மார்க்ஸ். அவரது சிலை திறப்பு விழாவில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். பின்பு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமைக்காக நான் அத்தனை பேருக்கும் நன்றிதெரிவித்துகொள்கிறேன் என கூறிவிட்டு காரைக்குடி புறப்பட்டு சென்றார்.





# மானாமதுரையில் ஆளும் திமுக அரசின் விலைவாசிகள் குறித்து, அதிமுக நிர்வாகிகள் பொதுமக்களிடம் நேரடி சந்தித்து கேட்டறிந்தனர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக ஆளும் திமுக அரசின் அத்தியாவசிய விலைவாசி உயர்வையும், கடந்தகால அஇஅதிமுக ஆட்சியில் நிலவிய விலைவாசியையும், மாதம் எவ்வளவு குடும்ப செலவீனம் குறித்தும், கடந்த ஐந்து ஆண்டுகளில்மின்கட்டணஉயர்வு, கடைகளில் அரிசி,பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு உள்ளிட்டவற்றால் பாதிப்புக்குள்ளான நகர் பகுதி இல்லத்தரசிகள் மற்றும் பொதுமக்களை அதிமுக-வின் விருதுநகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி தலைவர் மற்றும் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளருமான கோபி அவர்களின் தலைமையிலான நிர்வாகிகள் குழுவானது அச்சிடப்பட்ட பில்லுடம் ஒப்பிட்டு நேரில் சென்று சந்தித்து குறைகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்து, விழிப்புணர்வுபிரச்சாரம் மேற்கொண்டனர்.

இதில் மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் ஏ.சி. மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாகராஜ் மற்றும் குணசேகரன், ஒன்றிய செயலாளர் ஜெயபிரகாஷ், நகர செயலாளர் விஜி. போஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்நிகழ்வில் அஇஅதிமுக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பொதுமக்கள் நேரடி சந்திப்பானது, 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் அதிமுக முன்னெடுக்கும் முதற்கட்ட பிரச்சாரமாக அரசியல் வட்டாரத்தில் பார்க்கப்படுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அவர்கள் தமிழக வளர்ச்சி மற்றும் செய்தி துறை சார்பில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனி வாசலில் 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள வீறுகவியரசர் முடியரசன் அவர்களின் திருஉருவச் சிலையை திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு .கே .கே . எஸ். எஸ் .ஆர் . ராமச்சந்திரன், மாண்புமிகு நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஆர் .பெரிய கருப்பன் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் திரு மு. பெ. சாமிநாதன் ஒன்றிய முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆன திரு .பா. சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கார்த்திக் ப சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி திரு மாங்குடி முன்னாள் அமைச்சர் திரு அன்வர் ராஜா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் திரு முத்தரசன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு மு வீரபாண்டியன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் மரு. இரா. வைத்தியநாதன், இ.ஆ.ப., சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா பொற்கொடி, இ. ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் முனைவர் ந.அருள்.பீரோ கவியரசர் முடியரசன் அவர்களின் குடும்பத்தினர் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# மாநில அளவில் சாதித்த ஐவதகுடி ஐயப்பா பாலிடெக்னிக் மாணவர்கள் 36 பேருக்கு ஊக்கத்தொகையுடன் பாராட்டு

கடலூர்மாவட்டம்,வேப்பூர்அடுத்துள்ளஐவதகுடியில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்பா மற்றும் ஐயப்பா தொழில்நுட்பக்கல்லூரிகளில்வாரியதேர்வில்சாதனை படைத்த மாணவர்களுக்கான பாராட்டு விழா கல்லூரியின் யோகா அரங்கத்தில் நேற்று 31.01.2026



சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

தொழில்நுட்ப கல்வி இயக்ககம் கடந்த அக்டோபர் 2025-ல் நடத்திய வாரியத் தேர்வுகளில், இக்கல்லூரிகளில் பயின்ற 36 மாணவர்கள் மாநில அளவில் தேர்ச்சி பெற்று வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளனர். இந்தச் சாதனையைக் கொண்டாடும் விதமாக, கல்லூரியில் பயிலும் மாணவர்களை அவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் நிர்வாகம் பாராட்டி கௌரவித்தது. வெற்றி பெற்ற 36 மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களுடன் கூடிய ஊக்கத்தொகையினை நிர்வாகம் பரிசாக வழங்கி சிறப்பித்தது.

மாணவர்களின்இந்தமாநிலஅளவிலானவெற்றிக்குக் காரணமாக இருந்த துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களையும் கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. மேலும், ஒரு துறையில் உள்ள அனைத்து மாணவர்களையும் முழுமையாகத் தேர்ச்சி பெறச் செய்த துறைக்குத் தனியாகஊக்கத்தொகைவழங்கிநிர்வாகம்பாராட்டியது.

இந்நிகழ்ச்சியில் ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.ஸ்ரீ ஐயப்பா அறக்கட்டளையின் அறங்காவலர் சரவணன் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி, அவர்களின் மேலான சாதனையைக் குறித்துப் பாராட்டிப் பேசினார். கல்லூரியின் ஆலோசகர்கள் குமார் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் மாணவர்களை வாழ்த்தி உரையாற்றினர்.

தொடர்ந்து, புதிதாக அமைய உள்ள ஐயப்பா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் குருமணி மாணவர்களின் உழைப்பைப் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார். நிகழ்ச்சியின் இறுதியாகக் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளர் செந்தாமரை கண்ணன் அனைவருக்கும் நன்றி கூறினார். ராஜாராமன் இந்நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

# கடும் பனி மற்றும் பூச்சி தாக்குதல் காரணமாக, மா பூக்கள் கருகி வருவதால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டும் மா உற்பத்தி பெருமளவு பாதிப்பு





கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 32ஆயிரம் ஹெக்டேர் அளவில் மா விவசாயம் நடைபெற்று வருகிறது.தற்போது கால நிலை மாற்றம் காரணமாக முன்கூட்டியே மாமரங்களில் பூக்கள் பூக்கத்துவங்கியுள்ளன. கடும் பனி மற்றும் பூச்சி தாக்குதல் காரணமாக பூக்கள் கருகி வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளாக தொடர் நஷ்டம் காரணமாகவும் அரசு மா விவசாயிகளை கண்டு கொள்ளாத காரணத்தாலும் மாவட்டத்தில் 45 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்த மா விவசாயம் அழிந்து தற்போது 32ஆயிரம் ஹெக்டேராக மாறியுள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு ஏக்கருக்கு பல ஆயிரம் செலவு செய்து மருந்து அடித்திருந்த போதும் மாம்பூக்கள் கருகி வருவது வேதனை அளிக்கிறது. இதன் காரணமாக இந்த ஆண்டு மா உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படும். மா விவசாயிகளை காக்க இந்த அரசுநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இதுகுறித்து கேஆர்பி அணை இடதுபுற கால்வாய் பாசன சங்க தலைவர் சிவகுரு அவரகள் கூறியதாவது, மா விவசாயிகள் 1 ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை செலவு செய்துள்ளனர். கடந்த ஆண்டு மாங்காய் கிலோ ரூ.3க்கு எடுக்கப்பட்டதால், நஷ்டமடைந்த விவசாயிகள் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2000 ஹெக்டேர் விவசாயம் அழிக்கப்பட்டு மாற்று விவசாயத்திற்கு மாறியுள்ளனர். அதேபோல் தமிழகத்தில் இருந்து மாங்காய்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்தால், அவை தடை செய்யப்பட்டு மாநில எல்லையில் நிறுத்தப்படுகிறது. ஆனால் வேறு மாநிலத்திலிருந்து எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் தமிழகத்திற்குள் மாங்காய்களை கொண்டு வர முடிகிறது. உலக தரம் வாய்ந்த கிருஷ்ணகிரி மாங்காய்களுக்கு பதிலாக, ஆந்திர மாநிலத்திலிருந்து மாங்காய்களை விலைக்கு வாங்கி தரமற்ற மாங்கூல் உற்பத்தி செய்கின்றனர். இதனால் கிருஷ்ணகிரி மாவிவசாயிகள் பெரும் கஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். தமிழக அரசுக்கு கடந்த 5 ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் செவி சாய்க்கவில்லை. இதேநிலை நீடித்தால் கிருஷ்ணகிரி மாங்கனி நகரம் என்பதே அழிந்து போகும்.தமிழகஅரசு மா விவசாயிகளின் நலன் காக்க,அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும், மா மரத்திற்கான இன்சூரன்ஸ் அனுமதிக்க வேண்டும், அறுவடை கருவிகளை இலவசமாக வழங்க மா விவசாயிகளை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பேசினார்.

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி




தேவகோட்டை - சிவகங்கைமாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பாக தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பெண் குழந்தைகளை காப்போம்,பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. ஆசிரியை வள்ளி மயில் வரவேற்றார்.பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். ஆல் தி சில்ட்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்தி, சமூக நலத்துறை அலுவலர்கள் சிவகலா, ஜோன்ஸ் இனியா, கல்லூரி மாணவிகள் பார்கவி, ரபியத் பரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூகநலத்துறை அலுவலர்கள் நிகழ்வில் பேசுகையில், குழந்தை திருமணம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தை திருமணம் என்பது 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைப்பது ஆகும்.

பெண்ணுக்கு 18 வயது பூர்த்தி அடைந்தால் தான் திருமணம் செய்து வைக்கவேண்டும். ஆணிற்கு 21 வயது பூர்த்தி அடைந்தால் தான் திருமணம் செய்து வைக்கவேண்டும். குழந்தைத் திருமணம் செய்து வைக்கிறார்கள் என்று தெரிந்தால் சமூக நலத்துறை அலுவலகத்தில் சென்று தகவல் தெரிவிக்கலாம். நம்முடைய உறவினர்களை காட்டிக் கொடுத்தால் நமக்கு பிரச்சனை வரும் என்று நினைக்க வேண்டாம்.

நம்மதான் சொன்னோம் என்று யாருக்கும் தெரியாது. அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் 12ஆம் வகுப்பு வரை படித்தால் அடுத்து டிகிரி படிப்பதற்கு மாதா, மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

கற்ற கல்வி மட்டும் தான் நம்மை விட்டு போகாது, நம்முடைய தவறை திருத்திக்கொள்ள தான் ஆசிரியர்களும், பெற்றோர்களும் உள்ளார்கள். நம்முடைய நண்பர்களும் நம்முடைய தவறை சுட்டிக் காட்ட வேண்டும்.

மீட்பு மற்றும் தங்குமிடம் என்பது நமக்கு அப்பா இல்லை,, நானும் அம்மாவும் தனிமையில் இருக்கிறோம்.பக்கத்து வீட்டிலோ அல்லது மற்ற யாரோ ஒருவரால் ஒரு பிரச்சனை இருக்கிறது என்றால் 181 க்கு கால்செய்து நம்முடைய பிரச்சனையை சொன்னால் அவர்கள் நம்மை அழைத்துச் சென்று பாதுகாப்பு கொடுப்பார்கள். பத்து நாட்கள் வரை அங்கு தங்கலாம் .அதற்கு மேலும் தங்க வேண்டும் என்றால் சமூக நலத்துறை மூலம் உதவிகள் செய்வார்கள். உணவு ,உடை,தங்குமிடம் அனைத்தும் இலவசம். நம்முடைய போட்டோக்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது. நம்முடைய போட்டோக்களை தவறாக சித்தரிக்க வாய்ப்புகள் உள்ளது.

நாம் போன் பார்ப்பதை முழுவதும் தவிர்த்துவிட்டு நியூஸ் பேப்பர் போன்றவற்றையும்,நூலகபுத்தகங்களையும்வாசிக்கலாம். நம்முடைய படிப்பில் நாம் முழு கவனம் செலுத்த வேண்டும். எதற்கும் பயப்படாமல் தைரியமாக செயல்பட வேண்டும். இவ்வாறு பேசினார்கள். மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் கூறினார்கள் .ஆசிரியை முத்துமீனாள் நன்றி கூறினார் .

# திருச்செந்தூர் திருமுருகன் இறைவழிபாடுமன்றத்தில் 52வது ஆண்டு தைப்பூசத் திருவிழா தொடங்கியது

## 108 பெண்கள் பங்கேற்ற திருவிளக்கு வழிபாடு

திருச்செந்தூர் திருமுருகன் இறை வழிபாடு மன்றத்தின் 52வது ஆண்டு தைப்பூசத் திருவிழா 3 நாட்கள் கோவை துடியலூர்அருகேஉள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் கோவிலில் வெகு விமர்ச்சியாக நடைபெறுகிறது. இதில் முதல் நாள் நிகழ்வாக முருக பெருமானுக்கு சிறப்பு அலங்கார பூஜை மற்றும் 108 பெண்கள் பங்கேற்ற திருவிளக்கு வழிபாடு நடைபெற்றது. இதில்சுற்றுப்பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் இசை அமுதம் ஆர்கெஸ்ட்ரா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கோவை துடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் கோவிலில் திருச்செந்தூர் திருமுருகன் இறைவழிபாடு மன்றத்தின் 52வது ஆண்டு தைப்பூசத் திருவிழா 3 நாட்கள் வெகு விமர்ச்சியாக நடைபெறுகிறது.இதற்கு குருடம்பாளையம் ஊராட்சியின் முன்னாள் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலைவரும், திருச்செந்தூர் திருமுருகன் இறைவழிபாடு மன்றத்தின் தலைவரும்,அருள்மிகுவிருந்தீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவருமான பி.வி. மணி தலைமை வகித்தார்.

இந்த விழாவிற்கான அனைத்து பூஜைகளையும் விருந்தீஸ்வரர் கோயில் தயாநிதி குருக்கள் செய்தார். முதல் நாள் விழாவில் விநாயகப் பெருமானுக்கு தீபாராதனையுடன் தொடங்கி முருக பெருமாருக்கு அலங்கார பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து 108 பெண்கள் கலந்துக்கொண்ட திருவிளக்குவழிபாடுபூஜைகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நவ் ஹிந்துஸ்தான் ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சாந்தி செல்வராஜ் தலைமை தாங்கி குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். திருவிளக்கு வழிபாட்டை பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் ஞானமூர்த்தி ஓதுவார், சிவக்கொழுந்து ஓதுவார் நடத்தி வைத்தனர்.

வரும் சனிக்கிழமை மாலை சிவபெருமானுக்கு தீபாரதனை நடைபெறவுள்ளது. தொடர்ந்து மனித வாழ்வின் நிலைத்த மகிழ்ச்சிக்கு பெரிதும் தேவை சொத்துபத்துக்களா, சொந்தபந்தங்களா என்ற தலைப்பில் இன்னிசை பாட்டு மன்றம் நடைபெறுகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை முருக பெருமானுக்கு அபிசேக ஆராதனையும், அலங்காரம் மற்றும் தீபாராதனையும் நடைபெறுகிறது. தொடர்ந்து ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் நடைபெறுகிறது.

முதல் நாள் நிகழ்வின் இறுதியாக எஸ் வி எஸ் வசந்தகுமார் ஏற்பாட்டில் இசை அமுதம் ஆர்கெஸ்ட்ரா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை அருள்மிகு விருந்தீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவருமான பி.வி. மணி, திமுக ஒன்றியச் செயலாளர் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சுவாமிநாதன், அம்சவேனி பழனிச்சாமி, , வி.பி.சண்முகம், சூரியா வெள்ளியங்கிரி, எல். எம்.டபுள்யூ அசோகன், தம்பி பார்த்திபன், அன்னதான கமிட்டியினர், அன்புக்குமார் மற்றும் சண்முகசுந்தரம், பி.வி. செல்வராஜ், வேல்முருகன், கதிர்வேல், வேலுச்சாமி, தனசேகர், சுந்தரம், பழனிச்சாமி, ராமசந்திரன், மெய்யழகன், டெக்சன் ராஜன், சௌந்திரராஜன், பூபதி, வெள்ளகிணர் செல்வகுமார், ஜேகதிமணி, விவின், மோகனசுந்தரம், தணிக்கைசெல்வன், ரவிச்சந்திரன், சுரேஷ், பாபு, காளிதாஸ், பரமசிவம், பிடி.மோகன்ராஜ், எல்.எம்.டப்ளியூ சிவகுமார், மணிகண்டன், சரவணகுமார் உள்ளிட்டவர்கள் செய்திருந்தனர்.





தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தூத்துக்குடி மாவட்டம், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கபாடி, வாலிபால், கேரம், கயிறு இழுத்தல் போட்டி, ஸ்ட்ரீட் கிரிக்கெட் (ஆண்கள் மட்டும்), எறிபந்து (பெண்கள் மட்டும்) ஆகிய போட்டிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் தமிழ்நாடு அரசின் "உலகம் உங்கள் கையில்" இலவச மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் டி.ச.மகேஷ் தலைமை தாங்கினார். வணிகவியல் துறை தலைவர் முனைவர் தர்ம ரஜினி வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி ஆட்சி மன்ற குழு தலைவர் பாலமுருகன் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். கல்லூரி செயலாளர் ராஜன், அகஸ்தீஸ்வரம் வட்டார வேளாண்மைதலைவர்வழக்கறிஞர்ன்.தாமரைபாரதிஆகியோர்வாழ்த்துரைவழங்கினர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு ஆணையத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான என்.சுரேஷ்ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். நிகழ்ச்சியை பேராசிரியர் திருநாவுக்கரசு தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர் பூலியூர் காமராஜ் , திமுக நிர்வாகிகள் வைகுண்ட பெருமாள், சுதன்மணி, முத்துசாமி, ராஜா, சுப்பிரமணியன், அருண் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் துறை தலைவர் முனைவர் இளங்குமார் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா

## அமைச்சர் சு.முத்துசாமி விளையாட்டுப்போட்டிகளை துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள வ.உ.சி விளையாட்டரங்கத்தில் நேற்று (31.01.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 'இது நம்ம ஆட்டம் 2026' மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார். நேற்று 31.01.2026 மற்றும் இன்று 01.02.2026 வ.உ.சி. பூங்கா விளையாட்டு அரங்கம் மற்றும் காமராஜ் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றும் மாவட்ட அளவிலான இது நம்ம ஆட்டம் விளையாட்டு போட்டிகளில் ஒன்றிய அளவில் முதல் பரிசு பெற்ற 994 வீரர்கள்/ வீராங்கனைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்துகொள்ள உள்ளனர்.



அளவிலான இன்றையதினம்."இது நம்ம ஆட்டம்-2026" மாவட்ட விளையாடடுப்போட்டிகளை மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். இப்போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு முதல் பரிசுத் தொகையாக தலா ரூ.6,000/- இரண்டாம் பரிசாக தலா ரூ.4,000/- மூன்றாம்பரிசாகதலாரூ.2,000/- என மொத்தம் ரூ.10,08,000/- மதிப்பீட்டில் பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது.

மாவட்ட அளவில் ஆண்கள் ஸ்டிரிட் கிரிக்கெட் மற்றும் பெண்கள் கபாடி விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்கள் மாநில அளவிலானவிளையாட்டு போட்டிகளில் ஈரோடு மாவட்டத்தின் சார்பாக கலந்து கொள்ள தகுதி பெறவுள்ளார்கள்.

மாவட்ட இந்நிகழ்வில், ஈரோடு நாடளுமன்ற உறுப்பினர்கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார்,ஈரோடுவிளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சதீஷ்குமார். உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில், தொழில்நெறி வழிகாட்டும் கையேட்டினை வெளியிட்டார்



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (31.01.2026) தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில், தொழில்நெறி வழிகாட்டும் கையேட்டினை வெளியிட்டு, கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களை பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் தெரிவித்ததாவது

மாணவர்கள் சமூக மேம்பாட்டுக்காக தாங்கள் பயிலும் படிப்பினை ஊன்றுகோலாக வைத்து மேலும் முன்னேற பாட புத்தகம் தாண்டி உலக அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு சமூக உணர்வை ஏற்படுத்தும் நாளிதழ்கள் செய்தித்தாள்கள் போன்றவற்றை படிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும்.

410 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். சத்தியமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்றமாணவ,மாணவியர்களுக்குபரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கிவாழ்த்துக்களைத்தெரிவித்தார். முப்படைகளில் வேலைவாய்ப்புகள், ஆகியவை குறித்த துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் கருத்துக்களை கூறினார்கள். முன்னதாக, தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை துவக்கி வைத்து கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள புத்தகத்தினை பார்வையிட்டார். தொடர்ந்து, தொழில்நெறி வழிகாட்டும் கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், கோவை மண்டல இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) ஆ.ஜோதிமணி, ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் (உதவி இயக்குனர்) ரா.ராதிகா, உதவிஇயக்குனர்மாவட்டதொழில்மையம்ஜெகன்ராஜ், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சாந்தி, மாவட்ட திறன் அலுவலர் கவிதா, சத்தியமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சிவக்குமார், உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சென்னை-இராமேசுவரம் (வழி: காரைக்குடி) வந்தே பாரத் ரெயிலை இயக்க கோரிக்கை



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வழியாக,சென்னை-இராமேசுவரம் இடையே திருச்சி, புதுக்கோட்டை, காரைக்குடி, சிவகங்கை வழித்தடத்தில் "வந்தே பாரத்" அதிவிரைவுரயிலைஇயக்கவேண்டும்எனகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.,இதுதொடர்பாக, சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் அவர்களிடம், காரைக்குடியில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.,சென்னை முதல் இராமேசுவரம் வரை இயக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள வந்தே பாரத் ரயிலை, மேற்கண்ட வழித்தடத்தில் விரைவாக நடைமுறைப்படுத்தி, இதற்காக மத்திய ரயில்வே துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.,இந்த நிகழ்வில், தலைவர் சாமிதிராவிடமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இயற்கையின் அடிப்படை வண்ணங்கள் எனும் தலைப்பில் நடைபெற்ற தி ஃபர்ஸ்ட் ஸ்கூல் பள்ளி ஆண்டு விழா



இயற்கையின் அடிப்படை வண்ணங்கள் எனும் தலைப்பில் நடைபெற்றதி :பர்ஸ்ட் ஸ்கூல் பள்ளி ஆண்டு விழாவானது, சிருஷ்டி கே ரங் ஆண்டு விழா நிகழ்ச்சிகளாக நடைபெற்றதுடன் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது

கோவை கதிர்நாயக்கன் பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் தி :பர்ஸ்ட் ஸ்கூல் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ஆண்டு விழாவில் பள்ளி மாணவர்களுக்கு வாழ்வியல் மற்றும் இயற்கை அறிவியல் குறித்து தெரிந்து கொள்ளும் விதமாக ஒவ்வொரு தலைப்புகளில் ஆண்டு விழா நிகழ்வு நடைபெற்று வருகிறது...

இதன் தொடர்ச்சியாக 2026 ஆம் ஆண்டு சிருஷ்டி கே ரங் எனும் இயற்கையின் அடிப்படை வண்ணங்கள் எனும் தலைப்பில் ஆண்டு விழா நடைபெற்றது...

பள்ளியின் தாளாளர் பாலபுவனேஸ்வரி மற்றும் நிர்வாக அறங்காவலர் பால முருகேதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றவிழாவில்சிறப்பு விருந்தினராக சிந்தனை கவிஞர் கவிதாசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய அவர்,கல்வி கற்கும் மாணவர்கள் உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் உழவு தொழில் முறைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறிய அவர்,அப்போதுதான் உணவின் முக்கியத்துவம் குறித்து தெரிந்து கொள்ள முடியும் என தெரிவித்தார்..

முன்னதாக விழாவில் பள்ளியில் சிறந்து செயல்பட்ட மாணவ,மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது..

தொடர்ந்து இயற்கையின் அவசியத்தையும்,சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது குறித்து பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவ,மாணவிகள் நடத்தினர். இதில் நிலம், நீர், காற்று,ஆகாயம்,பூமி உள்ளிட்ட இயற்கைக்கான வண்ணங்களில் நாடகம், மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.. இதில் எல். கே.ஜி.பயிலும் குழந்தைகள் முதலான சிறுவர் சிறுமிகள் பல்வேறு வண்ண உடையணிந்து நடனம் ஆடினர்.. வண்ண ஆடைகள் அணிந்து மாணவ, மாணவிகள் நடத்திய இந்த கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன..

விழாவில் பள்ளியின் முதன்மை கல்வியாளர் ஹேமலதா,பள்ளி முதல்வர் செந்தில் மற்றும்,ஆசிரியர்கள் அனைத்து மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம்:

# கோவை அரசு பேருந்து நடத்துனர் சைக்கிளில் உலக சாதனை நோபல் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்டு அங்கீகாரம்




தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாதத்தை ஒட்டி பொதுமக்களிடையே சாலை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கோவையில் 57 வயது அரசு பேருந்து நடத்துனர் அறிவழகன் என்பவர் சைக்கிளில் 20 கிலோ எடையுடன் மேட்டுப்பாளையத்தில் இருந்து துடியலூர் வரை 40 கிலோ மீட்டர் தூரத்தை அரை பெடல் முறையில் ஓட்டி சாதனை செய்துள்ளார். இதனை நோபல் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்டு உலக சாதனையாக அங்கீகரித்துள்ளனர்.

கோவை சிறுமுகையைச் சேர்ந்தவர் அறிவழகன், 57 வயதான இவர் கோவையில் அரசு பேருந்து நடத்துனராக பணியாற்றி வருகிறார். இவர் தடகள வீரராக பல்வேறு உலக சாதனைகளை செய்துள்ளார்.

இந்த நிலையில் 37 வது தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகம், கோவை மண்டல தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மற்றும் மேட்டுப்பளையம் உட்கோட்ட காவல்துறையுடன் இணைந்து புதிய உலகசாதனைமுயற்சியில் ஈடுபட்டார்.

இதில் சாதரண சைக்கிள் ஒன்றின் மூலமாக 20 கிலோ எடையை சுமந்துகொண்டு,என்டபுள்யூ ஆர் விதிப்படி தொடர்ந்து இடைவிடாமல் அரை பெடல் முறையில் பயணம் மேற்கொண்டார்.

மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலர் சத்தியக்குமார் தலைமையில் நடைபெற்ற இதன் துவக்கவிழாவில் கண்காணிப்பாளர் ஸ்ரீகாந்த் அனைவரையும் வரவேற்றார். மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளர் சின்னகாமணன், போக்குவரத்து உதவி ஆய்வாளர் சதீஷ்பாபு, டி என் எஸ் டி சி கிளை மேலாளர் மணிவண்ணன், சுபா மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மகேஷ்வரன், எஸ் கே ஏ ஆர் கே பவுண்டேசன் மாநில தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன், அரிமா சங்க வட்டார தலைவர் பரமேஸ்வரன், சாலைகள் பாதுகாப்பு சங்க தலைவர் லெனின் சக்ரவர்த்தி, இமைகள் சாலைகள் பாதுகாப்பு மற்றும்விபத்துதடுப்புவிழிப்புணர்வு சங்க தலைவர் ஜார்ஜ், சேரநாடு கல்வி சமூக நல அறக்கட்டளை நிறுவனர் ஜாபர்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து மேட்டுப்பாளையம் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சதீஸ்பாபு நிகழ்ச்சியை கொடி அசைத்து துவக்கி வைத்தார். மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து தொடங்கிய இவரது சைக்கிள் பயணம் 40 கிலோ மீட்டர் தூரம் வந்து துடியலூர்வடக்குவட்டார போக்குவரத்து அலுவலகத்தில் முடிவடைந்தது.

துடியலூர் கோவை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற நிறைவு விழா நிகழ்ச்சியில் இமைகள் சாலை பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு விழிப்புணர்வுசங்கமாநில தலைவர் டேனியல், ப்ரோக்ராம் அட்வைசர் வெங்கடேஷ்வரன், ஈரோடு மாவட்ட தலைவர் பெரியசாமி, கோவை இணை போக்குவரத்து ஆணையர் அழகரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

துடியலூர் வடக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் குமார், கோவை மண்டல டி என் எஸ் டி சி பொது மேலாளர் செல்வகுமார், துடியலூர் காவல் ஆய்வாளர் தவசியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதையடுத்து சாதனை பயணத்தை நிறைவு செய்த அறிவழகனுக்கு நோபல் புக் ஆல் வோர்ல்டு ரெக்கார்டு உலக சாதனைக்கான சான்றிதழ் மற்றும் மெடல்களை நோபல் புக் ஆப் வோர்ல்டு ரெக்கார்ட்ஸ் பதிப்பு ஆசிரியர் தியாகு நாகராஜன், இயக்குநர் ஹேமலதா மற்றும் நரேந்திரன் ஆகியோர் வழங்கினர்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# கோபி பகுதியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், கூகளூர் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (31.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும்ஸ்டாலின்சிறப்பு திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 38 மற்றும் 39 வது மருத்துவ முகாம் இன்று 31.01.2026. கூகளூர் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப்பள்ளியிலும் மற்றும் பெருந்துறை பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது. இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்பப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 37 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 50.144 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 28,782 நபர்களுக்கு ECG-ம், 32,283 நபர்களுக்கு ஆய்வக பரிசோதனையும் 3,332 நபர்களுக்கு X-RAYம், 3,234 நபர்களுக்கு Scan-ம், 3,706 நபர்களுக்கு ECHO-ம், வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கூகளூர் காந்தி கல்வி நிலையம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 3 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும், 5 நபர்களுக்கு சஞ்சீவி பெட்டகமும், 5 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் என மொத்தம் 18 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# மொடக்குறிச்சி பகுதியில் உள்ள முழு நேர நியாயவிலைக்கடையின் புதிய கட்டிடத்தினை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, கணபதிபாளையம், தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் முழு நேர நியாயவிலைக்கடை கட்டிடத்தினை நேற்று (31.01.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களின் பயன்பாட்டிற்குதிறந்துவைத்து அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் செயல்படும் முழுநேரநியாயவிலைக் கடையான கிளியம்பட்டி நியாயவிலைக்கடையில் 1,184 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இந்த நியாய விலைக்கடையில் பொருட்களை பெற்று வந்த டி.மேட்டுபாளையம். சீரங்கம்பாளையம், பெரளிமேடு பகுதி மக்கள் கிளியம்பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து ஊரானது சுமார் 1.5 மற்றும் 2.05 கிலோ மீட்டர்தூரம்பயணம்செய்து அத்தியவசிய பொருட்களை பெற்றுவந்தனர். இப்பகுதி மக்கள் பயண துாரத்தை குறைத்து தங்கள் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை அமைத்து தர வேண்டும் என வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களிடம்கோரிக்கை வைத்ததன் பேரில் சுமார் 505 குடும்ப அட்டைகள் கொண்ட முழுநேர நியாய விலைக் கடையினை திறத்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இக்கடையானது அனைத்து வேலை நாட்களிலும் செயல்படவுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 913 முழுநேரம் மற்றும் 340 பகுதி நேரம் என மொத்தம் 1253 நியாய விலைக்கடைகள் உள்ளது. இதன் மூலம் 7.64 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

இந்நிகழ்வில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ். ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், துணைப்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) மாதேஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உளுந்தூர்பேட்டை அருகே உள்ள களமருதூர் பகுதியில்

# புகையிலை விற்பனை செய்த பெண் உட்பட இருவர் போலீசார் கைது

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள களமருதூர் பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக களமருதூர் காவல் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் அந்தப் பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர் அப்பொழுது களமருதூர் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்ற கரும்பு வெட்டும் தொழிலாளி தனது வீட்டில் பதுக்கி வைத்து கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு புகையிலை பொருட்களைவிற்பனைசெய்துவந்ததுதெரியவந்தது இதையடுத்துமணிகண்டனைகைதுசெய்தபோலீசார் அவர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 180 பாக்கெட் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர் மேலும் அவரது தம்பியான லாரி ஓட்டுநர் வெங்கடேசன் என்பவர் சென்னையில் இருந்து வீட்டிற்கு வரும் பொழுது தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வாங்கி வந்து தனது சகோதரரிடம் கொடுத்து விற்பனை செய்யப்பட்டு வந்தது தெரிய வந்தது இதைப்போல் களவனூர் கிராமத்தைச் சேர்ந்த ராணி என்ற பெண் அந்த கிராமத்தில் பெட்டிக்கடை நடத்தி வரும் நிலையில் அவர் தனது கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வைத்து விற்பனை செய்து வந்தது தெரிய வந்தது அவரையும் கைது செய்த போலீசார் இந்த இரு வேறு சம்பவம் குறித்து ராணி உட்பட மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்த களமருதூர் போலீசார் ராணி மற்றும் மணிகண்டன் ஆகிய இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர் மேலும் தலைமறைவாக உள்ள வெங்கடேசனை தேடி வருகின்றனர்...

# ஈரோடு விஜயமங்கலம் டோல்கேட் அருகில் கிரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் வாகன ஓட்டிகளுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு



தமிழகம் முழுவதும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் கடைபிடிக்கப்பட்டு வரும் நிலையில், ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே உள்ள விஜயமங்கலம் டோல்கேட் பகுதியில் கிரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் வாகன ஓட்டிகளுக்கு சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கிரைம் கண்ட்ரோல் சமித்தியின் ஈரோடு மாவட்ட தலைவர் சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு,பெருந்துறைதாலுகாசெயலாளர் ஞானசேகர் முன்னிலை வகிக்க, மாவட்ட நிர்வாகிநிஜாம்வரவேற்புரையாற்றினார்.இதில் மாநில தலைவர் அக்பர் அலி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வாகன ஓட்டிகள் கட்டாயம் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிய வேண்டும் என்றும், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார். இந்த விழிப்புணர்வு நிகழ்வில் முக்கிய பிரமுகர் விவேகானந்தன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார். மாநிலச் செயலாளர் பூங்குன்றன் நிகழ்ச்சிக்கான முழு ஏற்பாடுகளைச் செய்திருந்த நிலையில், மாவட்டச் செயலாளர் சஜித் நன்றியுரை வழங்கினார். இதில் முக்கிய நிர்வாகிகள் ராஜேந்திரன், அருள், லக்ஷ்மணன், ஜோதி, பிரவீன், தர்வேஷ், ராஜ்குமார், சுல்தான் மற்றும் உறுப்பினர்கள், டோல்கேட் பணியாளர்கள் பலரும் கலந்துகொண்டு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். மேலும், நெடுஞ்சாலை ரோந்து காவல்துறை உதவி ஆய்வாளர்பாபுமற்றும்பெருந்துறைகாவல்துறையினர் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி உறுதுணையாக இருந்தனர்.

# மனித நேய வார நிறைவு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் முத்துசாமி பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்




ஈரோடு மாவட்டம், ரங்கம்பாளையம், ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (30.01.2026) அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார விழாவில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்தாவது

,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மனித நேய வார விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இந்த மனித வார விழாவானது கடந்த 24.01.2026 தொடங்கி 30.01.2026 வரை ஆகிய 7 நாட்கள் நடைபெற்றது.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மனித நேய வார நிறைவு விழாவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி துணைமேயர் வே.செல்வராஜ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர்கு.மகேஸ்வரி,3-ம் மண்டலகுழுத்தலைவர் சசிக்குமார், ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சங்கர சுப்பிரமணியன், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரண கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது



தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரண கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. ஆணையர் ப்ரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில், தூத்துக்குடி மாநகராட்சியின் 25ஆம் ஆண்டை எதிர்நோக்கி வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

திருவிகநகரில்இருந்து மீன்வளக்கல்லூரி வரை புதிய இணைப்பு சாலை அமைக்கப்பட உள்ளது. மாவட்ட ஆட்சியர் இல்லத்தில் இருந்து ரோச் பூங்கா வரையில் உள்ள சாலை ஹெல்த் வாக் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் ஒரு மகளிர்பூங்காதிறக்கப்பட உள்ளது.மச்சாது பாலம் சீரமைக்கப்பட உள்ளது. தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு திட்டம் சிறப்பாகநடைமுறையில் உள்ளது. ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் தனி நபருக்காக தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் நடைபெற்று வருகிறது. தற்போதைய ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தம் முடிந்த பின்னர் முதல்வரின் உத்தரவின் பேரில் தூய்மைப் பணிகளை மாநகராட்சியே மேற்கொள்ளும். பக்கிள் ஓடை அகலப்படுத்தப்படும் சாலை விரைவில் சரிசெய்யப்படும் என்று மேயர் தெரிவித்தார்.



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் மூலைச்சாவு அடைந்த மூன்று நபர்களுக்கு மருத்துவமனை இயக்குனர் ரமேஷ் தலைமை கொண்ட மருத்துவர்கள் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளனர்.

# ஈரோடு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி: இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட் வழங்கிய கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேலுமணி



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு தெற்கு மற்றும் வடக்கு போக்குவரத்து காவல் நிலையங்கள் சார்பில் சாலை பாதுகாப்பு வார விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு வடக்கு ரோட்டரி கிளப் மற்றும் கே.எஸ்.ஆர் இன்ஜினியரிங் கல்லூரி மாணவ, மாணவிகள் இணைந்து நடத்தியசாலைபாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ளதனியார் மண்டபத்திலிருந்து தொடங்கிய இப்பேரணி, அரசு மருத்துவமனை ரவுண்டானா மேம்பாலம் பகுதியில் நிறைவடைந்தது.

இந்தநிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக, ஈரோடு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேலுமணி அவர்கள் கலந்துகொண்டு, ஹெல்மெட் அணியாமல் வந்த பத்து இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட்களை வழங்கி சாலை பாதுகாப்பின் அவசியம் குறித்து அறிவுறுத்தினார்.

இப்பேரணியில் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் ரமேஷ் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுடன் இணைந்து பொதுமக்களிடையேவிழிப்புணர்வை ஏற்படுத்தினர். குறிப்பாக, எமதர்மராஜா வேடமணிந்த நபர் ஒருவர் நூதன முறையில் பொதுமக்களுக்கு எச்சரிக்கைவிடுத்தது அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததுடன் பெரும் வரவேற்பையும் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு வடக்கு ரோட்டரி கிளப் பிரசிடெண்ட் சரவணன் மற்றும் உறுப்பினர் லட்சுமி பேக் ஹவுஸ் ஜெய் சராம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல்லில் இருந்து காஞ்சிபுரம் நோக்கிச் சென்ற காஞ்சி சங்கர மடத்தின் மடாதிபதி சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாலி தனியார் கல்லூரிக்கு வந்தார் அங்கு மடாதிபதிக்கு பூரண கும்பம் மரியாதை அளிக்கப்பட்டது தொடர்ந்து அங்குள்ள தனி அறைக்கு மடாதிபதி சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் மாநில செயலாளர் அஸ்வத்தாமன் இந்து மக்கள் கட்சியின் மாநில செயலாளர் ஏழுமலை அதிமுக கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் குமரகுரு மற்றும் பாமக நிர்வாகிகள் சென்றனர் சுமார் 10 நிமிடம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் நடைபெறவுள்ள தமிழக சட்டமன்ற தேர்தல் குறித்து ஆலோசனை நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.